DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.315/2016 | Deposition of Witness for : PW6 |
| Name : ஜெபமணி | Father/Husband Name : சாமுவேல் |
| Age : 38 | Village : புத்தன்தருவை |
| Taluk : சாத்தான்குளம் | Calling : கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20 January 2026.
Accused A1 present. A2, A3 absent. Petition U/s. 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது புத்தன்தருவையில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாம் கையொப்பம் என்னுடையதுதான். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. நான் தட்டார்மடத்தில் இருந்து வரும்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். குறிப்பாக இடம் ஞாபகமில்லை. என் முன்பு எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. **அந்த கையெழுத்து அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. கடந்த 16.03.2014 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நானும் என்னுடன் முத்துராஜ் என்பவரும் எங்கள் ஊர் அம்மன் கோவில் அருகில் உள்ள 1 வது எதிரி தங்கராஜ் என்பவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த போலீசார் எங்கள் முன்பு 1 வது எதிரியின் வீட்டில் இருந்த TVS Champ மோட்டார் சைக்கிள் ஒன்றை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த அத்தாட்சியில் நானும், முத்துராஜ் என்பவரும் கையெழுத்து செய்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.01.20 16:25:31 +0530

Judicial Magistrate, Sathankulam.